டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 23.09.2026 புதன்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.14, Issue : 080 | Madurai | Online Edition

## குன்னூரில் உபாசி தேயிலை ஆராய்ச்சி அறக்கட்டளையின் நூற்றாண்டு விழா

# வலுவான இந்திய தேயிலை பிராண்டுகளை உருவாக்க குடியரசு துணைத் தலைவர் வேண்டுகோள்

புது தில்லி, செப்.22

குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன், நீலகிரி மாவட்டம், குன்னூரில் இன்று நடைபெற்ற தென்னிந்திய தோட்ட அதிபர்கள் சங்கம் (UPASI) தேயிலை ஆராய்ச்சி அறக்கட்டளையின் நூற்றாண்டு விழா மாநாட்டை தொடங்கி வைத்து உரையாற்றினார்.

இந்திய தேயிலையை உலகச் சந்தையில் மேலும் போட்டித் திறன் மிக்கதாக மாற்றுவதற்கு அதிக அளவிலான ஆராய்ச்சி, தொழில்துறை நவீனமயமாக்கல், தர மேம்பாடு, பிராண்டிங் மற்றும் மதிப்புக் கூட்டுதல் ஆகியவற்றில் கவனம் செலுத்த வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

தேயிலைத் தொழில், தோட்ட உரிமையாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு 100 ஆண்டுகளாக சேவையாற்றி வரும் உபாசி தேயிலை ஆராய்ச்சி அறக்கட்டளைக்கு வாழ்த்து தெரிவித்த குடியரசு துணைத் தலைவர், தேயிலைத் துறையின் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சியில் அறக்கட்டளை ஆற்றியுள்ள நீண்டகாலப் பங்களிப்பைப் பாராட்டினார்.

இந்தியா உலகின் மிகப்பெரிய தேயிலை உற்பத்தி மற்றும் நுகர்வு நாடுகளில் ஒன்றாக விளங்குவதாகக் குறிப்பிட்ட அவர், தேயிலைப் பயிரிடுதலுடன் அதன் முறையான பதப்படுத்துதல் மற்றும் உற்பத்தியிலும் உரிய கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றார்.

தேயிலைத் துறையில் தரம் மற்றும் உற்பத்தித் திறனை மேம்படுத்தும் வகையில் ஆராய்ச்சியை மேலும் விரிவுபடுத்த வேண்டும் என்று குடியரசு துணைத் தலைவர் வலியுறுத்தினார்.

மாறிவரும் சந்தைத் தேவைகளுக்கு ஏற்ப தரத்தைப் பராமரிப்பது குறித்து தோட்ட உரிமையாளர்களுக்கு தொடர்ந்து பயிற்சி அளிக்க வேண்டும் என்றும் அவர் கூறினார். உலக தேயிலைச் சந்தை நாளுக்கு நாள் போட்டி மிகுந்ததாக மாறி வருவதால், புதிய அணுகுமுறைகளும் ஆராய்ச்சிகளும் அவசியம் என்றார்.

பிற தேயிலை உற்பத்தி நாடுகளுடனான போட்டியைச் சுட்டிக்காட்டிய அவர், இந்திய தேயிலையை எவ்வாறு சிறப்பாகச் சந்தைப்படுத்துவது, வருவாயை எவ்வாறு அதிகரிப்பது, தோட்டத் தொழில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வு காண்பது ஆகியவற்றில் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

தேயிலைத் துறையின் தேவைகளை முறையாக மதிப்பீடு செய்து, மத்திய மற்றும் மாநில அரசுகளுடன் இணைந்து உறுதி யான திட்டங்களைத் தயாரிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

ஆராய்ச்சிக்குத் தேவையான நிபுணர்களை உருவாக்குதல், தேயிலைத் தொழிற்சாலைகளை நவீனமயமாக்குதல் மற்றும் தேவையான புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதன் மூலம் உலகத் தரத்தைப் பூர்த்தி செய்யும் வகையில் இந்திய தேயிலை உற்பத்தி இருக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

தேயிலை உற்பத்தியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் மொத்த தேயிலை ஏற்றுமதி மற்றும் விற்பனையைத் தாண்டி, வலுவான இந்திய தேயிலை பிராண்டுகளை உருவாக்க வேண்டும் என்று குடியரசு துணைத் தலைவர் கேட்டுக் கொண்டார். நவீன சிந்தனையுடனும், அதிக ஆற்றலுடனும் முன்னேறி, உலகச் சந்தையைப் பிடிக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

ஏற்றுமதியாளராக பல்வேறு நாடுகளுக்குச் சென்ற தனது அனுபவத்தைச் சுட்டிக்காட்டிய அவர், பல்வேறு நாடுகளின் தேயிலை பிராண்டுகள் சர்வதேசச் சந்தைகளில் குறிப்பிடத்தக்க

அளவில் காணப்படுவதாகவும், இந்திய தேயிலை பிராண்டுகளின் உலகளாவிய வெளிப்பாட்டை மேலும் அதிகரிக்க வேண்டிய அவசியம் உள்ளதாகவும் குறிப்பிட்டார்.

தேயிலைத் துறையைச் சேர்ந்தவர்கள் ஒன்றிணைந்து இந்திய தேயிலைக்கான வலுவான பிராண்டுகளை உருவாக்கி சந்தைப்படுத்த வேண்டும் என்றும் அவர் கூறினார்.

உபாசி தனது நூற்றாண்டு விழா ஆண்டை ஒரு நீடித்த சாதனையாக மாற்றும் வகையில், தேயிலை ஆராய்ச்சி மையங்களின் எண்ணிக்கையை மேலும் பல பகுதிகளுக்கு விரிவுபடுத்தி, நவீன உபகரணங்களுடன் அவற்றை மேம்படுத்த வேண்டும் என்று குடியரசு துணைத் தலைவர் கேட்டுக் கொண்டார்.

தேயிலைத் தொழிலில் தொழிலாளர்களின் முக்கிய பங்கைச் சுட்டிக்காட்டிய குடியரசு துணைத் தலைவர், அவர்களின் நலனில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்றார்.

நூற்றாண்டு விழாவின் ஒரு பகுதியாக, தென்னிந்தியாவின் நான்கு மாநிலங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் தோட்டத் தொழிலாளர்களுக்காக மருத்துவ ஆலோசனை மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதனைகளை வழங்கும் வகையில் சில மருத்துவ மையங்களை அமைப்பதை உபாசி பரிசீலிக்கலாம் என்றும் அவர் பரிந்துரைத்தார்.

தொழில் நலனும் தொழிலாளர் நலனும் ஒன்றோடொன்று இணைந்து செல்ல வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

தேயிலையில் மதிப்புக் கூட்டுதலின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்த குடியரசு துணைத் தலைவர், புதிய தயாரிப்புகள், உற்பத்தி முறைகள் மற்றும் சந்தை வாய்ப்புகளை உருவாக்குவதில் தொழில்துறையின் முன்னணி நிறுவனங்கள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என்றார்.

இந்தியா மிகப்பெரிய தேயிலை உற்பத்தி நாடாக மட்டுமின்றி, மிகப்பெரிய தேயிலை நுகர்வு நாடுகளில் ஒன்றாகவும் விளங்குவதால், உள்நாட்டுச் சந்தையின் வாய்ப்புகளைத் தொழில்துறை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

தேயிலைத் துறைக்கு மத்திய அரசு, மாநில அரசுகள் மற்றும் தேயிலை வாரியம் தேவையான ஆதரவை வழங்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்த குடியரசு துணைத் தலைவர், தொழில்துறை சார்பில் ஒருங்கிணைந்த திட்டத்தைத் தயாரிப்பது அவசியம் என்றார்.தேயிலைத் துறையைச் சேர்ந்த அனைவரும் அரசுடன் இணைந்து செயல்பட்டு, இந்தச் சாதகமான சூழலைப் பயன்படுத்தி தோட்டங்களையும், தொழிலையும், தேயிலை விற்பனையையும் வலுப்படுத்த வேண்டும் என்று குடியரசு துணைத் தலைவர் கேட்டுக்கொண்டார்.

நிகழ்ச்சியின் போது, குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதா கிருஷ்ணன் Tea Research in South India – A Compendium என்ற நூலை வெளியிட்டார். தென்னிந்தியாவில் தேயிலை ஆராய்ச்சியின் பாரம்பரியம் மற்றும் பங்களிப்புகளை இந்த நூல் தொகுத்து வழங்குகிறது.

நிகழ்ச்சியில் தமிழக ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர், உதகமண்டலம் சட்டமன்ற உறுப்பினர் போஜராஜன், இந்தியத் தேயிலை வாரியத்தின் துணைத் தலைவர் சி.முருகன், உபாசி தலைவர் அஜோய் திப்பையா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தேயிலைத் தோட்ட உரிமையாளர்கள், ஆராய்ச்சியாளர்கள், வேளாண் விஞ்ஞானிகள், தொழில்துறை பிரதிநிதிகள் மற்றும் பிற முக்கியப் பிரமுகர்களும் மாநாட்டில் கலந்து கொண்டனர்.



# வகை வகையான சூப் தொடர்...

# சூப் செய்வது எப்படி?

**45. குடைமிளகாய் சூப்**

**தேவையான பொருட்கள்**

குடைமிளகாய் – 2

வெங்காயம் – 1

பூண்டு – 2 பல்

மிளகு தூள் – ½ டீஸ்பூன்

உப்பு – தேவையான அளவு


**செய்முறை**

குடைமிளகாயை வறுத்து தோல் நீக்கி அரைத்து கொதிக்கவிடவும்.

தொகுப்பு : *G.சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

நாளை தொடரும்...

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**



# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

**சிறப்புச்சலுகை**



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

**96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483**

# அங்கக வேளாண் இடுபொருள் தயாரித்தல் குறித்த பயிற்சி



இராமநாதபுரம், செப்.22

தமிழ்நாடு அரசு வேளாண்மை துறையின் கீழ் இராமநாதபுரம் மாவட்டம், மண்டபம் வட்டாரம், கும்பரம் கிராமத்தில் ஆத்மா திட்டத்தின் கீழ் மாவட்டத்திற்கு உள்ளான விவசாயிகள் பயிற்சி அங்கக வேளாண் இடுபொருள் தயாரித்தல் என்ற தலைப்பில் நடத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சிக்கு கீதாஞ்சலி, வேளாண்மை உதவி இயக்குனர், பயிர் காப்பீடு ராமநாதபுரம், மோனிஷா, வேளாண்மை உதவி இயக்குனர் (பொ) திருப்புல்லாணி, அவின் குமார் வேளாண்மை அலுவலர், திருப்புல்லாணி மற்றும் முனைவர் ஜெகதீசன் மற்றும் முனைவர் பாலாஜி, வேளாண் விஞ்ஞானிகள், வேளாண் அறிவியல் நிலையம், ராமநாதபுரம் ஆகியோர் பயிற்சியில் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு அங்ககப் பண்ணையம் தலைப்பின் கீழ் வேளாண் இடுபொருள்கள் தயாரித்தல் குறித்து பயிற்சி வழங்கினர். இதில் விவசாயிகளுக்கு ஐந்திலை கரைசல், 3ஜி கரைசல், வேப்பங்கொட்டை சாறு கரைசல், அமிர்த கரைசல், கன ஜீவாமிர்தம், பஞ்சகாவியம் தயாரித்தல், மீன் அமினோ அமிலம் தயாரித்தல், மூலிகை பூச்சி விரட்டி தயாரித்தல் போன்ற இடுபொருட்கள் தயாரித்தல் குறித்து பயிற்சி வழங்கப்பட்டது. மேலும் பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு அங்கக வேளாண் இடுபொருட்கள் தயாரித்தல் குறித்த துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டது.

மேலும் தாமஸ் துணை வேளாண்மை அலுவலர் முகமது யூசூப், உதவி வேளாண் அலுவலர் கலந்து கொண்டனர். கூட்ட முடிவில் பானுமதி, வட்டார தொழில்நுட்ப மேலாளர் நன்றியுரை கூறினார். பயிற்சிக்கான ஏற்பாடுகளை பவித்ரன், சோனியா. உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் செய்திருந்தனர்.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம் நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள் ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள் தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள் அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன் ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# சிறுதானிய பயிர் சாகுபடியில் தரமான விதையை பயன்படுத்தினால் குறைந்த செலவில் நிறைந்த வருமானம்

புதுக்கோட்டை, செப்.22

சிறுதானிய பயிர்கள் இறவையிலும், மானாவாரியிலும் அனைத்து வகை நிலங்களிலும் பயிரிட ஏற்றது. நீர் வளம் குன்றி காணப்படும் சூழலில் வறட்சியை தாங்கி வளரும் மானாவாரி பயிர் என்று இதனை சொன்னால் மிகையாகாது. ரு

குறைந்த அளவு நீரை எடுத்துக் கொண்டு அனைத்து சூழலுக்கும் ஏற்ப வளருகின்றது. இதன் வளர்ச்சிக்கும், சிறந்த விளைச்சலுக்கும் குறைந்த உரங்களே தேவைப்படுகின்றது. ஆதலால், பயிர்களில் பூச்சிகள் மற்றும் நோய் தாக்குதலும் குறைந்தே காணப்படுகின்றது. மானாவாரியில் தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழையை பொறுத்து விதைக்கலாம்.

சிறுதானியப் பயிர்கள் புரட்டாசிப் பட்டத்திற்கு மிகவும் உகந்தவையாகும். இந்த காலகட்டத்தில் நடப்படும் பயிர்கள் மழையை எதிர்பார்த்து வளர்ந்து அறுவடைக்கு தயாராகின்றன. பிற தானியப் பயிர்களைவிட குறுந்தானிய பயர்கள் மிகக் குறைந்த நாட்களில் அறுவடைக்கு வந்து விடுகின்றன. தினை 80-90 நாட்களிலும் வரகு 120 நாட்களிலும் பனிவரகுமற்றும் குதிரைவாலி 75 நாட்களிலும் அறுவடை செய்யலாம். இத்தகைய பயிர்களை உற்பத்தி செய்வதற்கு குறைந்த செலவே ஆகின்றன. இப்பயிர்களை பூச்சிகள் மற்றும் நோய்கள் அதிகம் தாக்குவது இல்லை.

சிறுதானியங்களான தினையில் கோ 6, கோ (தி) 7 மற்றும் எடிஎல் 1 சாமையில் பையூர் 2 கோ 3 கோ (சாமை) 4 மற்றும் எடிஎல் 1 வரகில் கோ 3, ஏபிகே-1 பனி வரகில் கோ 1, கோ 2, கோ 4, கோ 5 (பிவி) மற்றும் குதிரைவாலியில் கோ (கேவி) 2, எம்டியு 1 ஆகிய இரகங்கள் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் இருந்து வெளியிடப்பட்டுள்ளது.

சிறுதானிய பயிர்களான சோளம், கம்பு, ராகி, தினை, சாமை, குதிரைவாலி ஆகிய பயிர்களுக்கு குறைந்தபட்ச முளைப்புத் திறன் 75 சதவிகிதமும், ஈரப்பதம் 12 சதவிகிதமும், புறத்தூய்மை 98 சதவிகிதமும் (ராகி 97 சதவிகிதம்) இருக்க வேண்டும்.

புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் சாகுபடி செய்ய வாங்கும் விதைகளையோ அல்லது தங்கள் கைவசம் உள்ள விதைகளையோ விதைப்பதற்கு முன் முளைப்புத்திறன் அறிந்து பயன்படுத்த வேண்டும்.

தரமான விதைகளை பயன்படுத்தும் போது விதைகளின் முளைப்புத்திறன் அதிகரிப்பதோடு நல்ல வீரியமான நாற்றுகளும் போதிய பயிர் எண்ணிக்கை பராமரிக் கப்பட்டு அதிக மகசூல் பெறலாம்.

எனவே விதைக்குவியலில் இருந்து விதை மாதிரிகளை சோளம், வரகு ஆகிய பயிர்களுக்கு 100 கிராம், கம்பு, ராகி, தினை, சாமை, குதிரைவாலி ஆகிய பயிர்களுக்கு 25 கிராம் ஆகிய அளவில் விதை மாதிரி எடுத்து புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள நம்பர் 30, இராமலிங்கம் தெரு, திருக்கோகர்ணம் 622 002, என்ற முகவரியில் செயல்பட்டு வரும் விதைப்பரிசோதனை நிலையத்தில் ரூ.80/- ஆய்வு கட்டணமாக செலுத்தி பயிர் மற்றும் ரகம் குவியல் எண் ஆகியவை குறித்த விபர சீட்டுடன் தங்களது முழு முகவரியுடன் கூடிய கடிதத்துடன் மேற்கண்ட முகவரிக்கு அனுப்பி விதையின் முளைப்புத்திறன் அறிந்து தரமான விதைகளை பயன்படுத்தி அதிக மகசூல் பெற வேண்டுமாறு விதைப்பரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அலுவலர் செ.சுமித்ராதேவி மற்றும் மா.செல்வம் ஆகியோர் கேட்டுக் கொண்டனர்.



# விதை சேமிப்பில் விதை ஈரப்பதத்தின் பங்கு

விளையும் பயிர் முளையிலேயே தெரியும் என்பதற்கேற்ப தரமான விதை உற்பத்தி செய்ய விதை உற்பத்தியாளர்கள் பயிர் விளைச்சலுக்கு தேவையான தொழில் நுட்பங்களை நல்ல முறையில் கடைபிடிக்க வேண்டும். தரமான விதை என்பது சான்று பெற்ற விதைகளாகும். அதாவது அவை குறிப்பிட்ட தர நிர்ணயித்திற்குள் புறத்தூய்மை, ஈரப்பதம், முளைப்புத் திறன் மற்றும் பிற இரக கலப்பு ஆகியவற்றை கொண்டதாகும்.

உற்பத்தி செய்த விதைக்கு விதைச்சான்று பெறுவதற்கும் விதையை சேமிப்பதற்கும் ஈரப்பதம் மிக முக்கிய பங்கு வகிக்கிறது. ஒவ்வொரு பயிர் விதைக்கும் விதையில் அதிகபட்ச குறிப்பிட்ட ஈரப்பதம் மட்டுமே இருக்கலாம். உதாரணத்திற்கு நெல்லுக்கு 13%, சிறுதானியத்திற்கு 12%, பயறு வகை பயிர் மற்றும் எண்ணெய் வித்து பயிர் விதைகளுக்கு 9%, மட்டுமே இருக்கலாம். இவ்வாறு அதிகபட்ச ஈரப்பதம் ஒவ்வொரு பயிருக்கும் மாறுபடும்.

சேமிக்கும் விதையில் குறிப்பிட்ட அளவு ஈரப்பதத்திற்கு மேல் இருந்தால் விதை சேமிப்பின் போது பூச்சிநோய் தாக்குதல் ஏற்பட்டு, விதையின் முளைப்புத்திறன் பாதிக்கப்படும். முளைப்புத் திறன் பாதிக்கப்பட்டால் அந்த விதை விதைப்பதற்கு ஏற்றதாக இருக்காது. அதனால் விதையின் முளைப்புத்திறனை பாதுகாக்க விதையின் ஈரத்தன்மை அறிந்து, விதைகளை தேவையான ஈரத்தன்மைக்கு கொண்டு வந்து சேமித்தால் விதைகளை நீண்ட நாட்களுக்கு சேமித்து வைக்க முடிகிறது. இத்தரத்தை நிர்ணயப்பதில் விதைப் பரிசோதனை நிலையம் முக்கிய பங்கு வகிக்கிறது.

எனவே விதை உற்பத்தியாளர்கள் மற்றும் விவசாயிகள் தங்களிடம் உள்ள விதையின் ஈரப்பதம் அறிந்து கொள்ள விதைக் குவியலிலிருந்து 100 கிராம் விதை மாதிரி எடுத்து காற்று புகாத பாலித்தீன் பைகளில் அடைத்து பயிர், இரகம், குவியல் எண் ஆகியவை குறிப்பிடப்பட்டு அனுப்ப வேண்டும். முளைப்புத் திறன் மற்றும் புறத்தூய்மை ஆகிய விதைத்தரங்களையும் அறிந்து கொள்ள வேண்டியிருப்பின் தேவையான அளவு விதை மாதிரி எடுத்து ஈரப்பதம் அறிய வேண்டிய விதை மாதிரியுடன் மற்றொரு பையிலிட்டு, பயிர், இரகம், குவியல் எண் ஆகியவை

குறிப்பிடப்பட்டு முகப்புக் கடிதத்துடன் ஒரு மாதிரிக்கு ரூ.80/- வீதம் கட்டணத்துடன் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி, விதை மாதிரிகளின் பரிசோதனை முடிவுகளை பெற்றுக் கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது.

விதை மாதிரி அனுப்ப வேண்டிய முகவரி : விதைப் பரிசோதனை அலுவலர், விதைப் பரிசோதனை நிலையம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், தர்மபுரி 5.

இவ்வாறு தர்மபுரி விதைப்பரிசோதனை அலுவலர் இரா.கிரிஜா தெரிவித்தார்.



# ஏரி, குளங்களை தூர்வாரி பராமரிப்போம்?

விவசாயிகளின் குடிநீர், விவசாய பயன்பாட்டுக்கான தண்ணீர் தேவையை நிறைவேற்றுவதுடன், மட்டுமின்றி பறவைகள், கால்நடைகள், விலங்குகளின் குடிநீர் ஆதாரமாக இவை விளங்குகின்றன.



ஏரிகள், குளங்கள், கண்மாய்களில் மழைக்காலங்களில் பெய்கின்ற மழை நீரை தேக்கி வைப்பதன் மூலமாக நிலத்தடி நீர்மட்டம் உயர்வதுடன் அளவுக்கதிகமான நீரையும் சேமிக்க முடிகிறது. எனவே தான் பழங்காலந்தொட்டே நம்முடைய முன்னோர்கள் மழை வருவதற்கு முன் அவற்றை தூர்வாரி செடி, கொடிகளை அகற்றி மேல்படிந்துள்ள வண்டல் மண்ணை அகற்றி தங்களுடைய கிராம ஏரி, குளங்களை அவர்களே தூர்வார ஆர்வத்துடன் ஈடுபட்டனர். இதை தான் ‘குடிமாரமத்து‘ என்று அழைத்தனர்.

**ஏரி, குளங்களை ஏன் தூர்வார வேண்டும்?**

பொதுவாக நாம் ஏரிகளில் தான் அன்றாட கழிவுகள் குப்பைகளை கொட்டுகிறோம். அதுமட்டுமல்லாது நீர்பரப்பின் மேற்பகுதியில், ஆகாய தாமரை, நெய்வேலி கட்டாமாணக்கு, கருவேல் போன்ற செடிகள் பரவி கிடைக்கின்றன. அவற்றை மழைக்காலம் தொடங்குவதற்கு முன் வெட்டி, அப்பறப்படுத்து தூர்வார வேண்டும். சரியாக பராமரிக்கவில்லை ஏன்றால் ஏரிக்கு வரும் நீர் வரத்து கால்வாய் அடைபட்டு தண்ணீர் தேங்காமல் வீணாகி கடலில் போய் கலந்துவிடும்.

கடந்த ஆண்டில் பருவ மழை போதியளவு பெய்ததால் பல மாவட்டங்களில் 100% ஏரி குளங்கள் நிரம்பின. அதற்கு

மாறாக தற்போது தென்மேற்கு பருவ மழை இயல்பை விட 46% குறைவாக பெய்தது. இதனால், ஏரி குளங்களில் நீர் மட்டமின்றி வறண்டு கிடக்கின்றன.

**தூர்வார சரியான தருணம் இது தான்?**

தற்போது வடகிழக்கு பருவமழை மூலமாக அதிகபட்சமாக மழை நீரை பெற வாய்ப்புள்ளதால் இந்த தருணத்தில் (அக்டோபர் முதல் நவம்பர் மாத வரை மழை காலம்) அதற்கு முன்னதாகவே தூர்வார வேண்டும். உபரி நீர் கடலில் சென்று கலக்காமல் இருக்க தூர்வாருவது செய்வது அரசின் அவசியக் கடமையாகும்.

**தமிழகத்திலுள்ள ஏரிகளின் எண்ணிக்கை எவ்வளவு?**

தமிழகத்தில் பொதுப் பணித்துறை மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் கட்டுப்பாட்டில் 39,202 ஏரிகள் உள்ளன. அதிகபட்சமாக செங்கல்பட்டு மாவட்டத்தில் தான் ஏரிகள் 528 உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

முறையாக தூர்வாரி பெய்கின்ற மழை நீரை சேமித்து கரைகளை பலப்படுத்திட அரசுடன் பொது மக்களும் ஈடுபட வேண்டும்.

வடகிழக்கு பருவ மழை காலமாக இருப்பதால் ஏரி குளங்களை முறையாக பாரமரித்தால் தண்ணீரில் தன்னிறைவு அடையலாம்.

அந்த காலத்துல பிட்டுக்கு மண் சுமந்த சுந்தர பாண்டியன் போல நாமும் செயல் படுவோம். ஏரி, குளங்களை பாதுகாக்க.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**



# அங்கக மற்றும் இயற்கை வேளாண்மை குறித்த விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது

விழுப்புரம், செப்.22

விழுப்புரம் மாவட்டம், மரக்காணம் வட்டாரம், வேளாண்மை துறை ஆத்மா திட்டத்தின் மூலம் ஆலங்குப்பம் கிராமத்தில் அங்கக மற்றும் இயற்கை வேளாண்மை குறித்த விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது.





இப்பயிற்சியில் திண்டிவனம் வேளாண்மை அறிவியல் நிலைய பேராசிரியர்கள் செந்தமிழ் மற்றும் சிபி செபஸ்டியன் ஆகியோர் கலந்து கொண்டு தொழில்நுட்ப உரையாற்றினார்.

இப்பயிற்சியில் அங்கக வேளாண் இடுபொருட்களான ஜீவாமிர்தம், கன ஜீவாமிர்தம், பஞ்சகாவியா, மீன் அமிலம், ஐந்திலை கரைசல், இஞ்சி, பூண்டு கரைசல் ஆகியவற்றின் உற்பத்தி மற்றும் உபயோக முறைகள் குறித்தும், விவசாயிகள் பங்கேற்பு முறையில் அங்கக சான்றிதழ் பெறும் முறைகள் குறித்தும் விளக்கமாக கூறினார்.

மேலும் அங்கக வேளாண்மை முறையில் விவசாயம் செய்யும் போது உற்பத்தி குறைவாக இருப்பது குறித்தும், ஆனால் உற்பத்தி செய்த பொருட்களுக்கு விலை கூடுதலாக கிடைப்பது குறித்தும் கூறினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் நரசிம்ம ராஜ், ஒருங்கிணைந்த பூச்சி நோய் மேலாண்மையில் அங்கக வேளாண் இடு பொருட்களின் பயன்பாடு குறித்து கூறினார்.

பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சந்திரசேகரன் மற்றும் அய்யனார் செய்திருந்தனர். இப்பயிற்சியில் சுமார் நாற்பது மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# செம்பரை கிராமத்தில் உழவர் பெருந்திரள் கூட்டம்



திருச்சி, செப்.22

அட்மா திட்டம் சார்பில் திருச்சி மாவட்டம், செம்பரை கிராமத்தில் உழவர் பெருந்திரள் கூட்டம், லால்குடி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர், சி.சத்தியப்பிரியா தலைமையில் நடைபெற்றது.

இதில் கோடை உழவு, பசுந்தாள் உர பயிர் தக்கைபூண்டு விதைப்பு, சம்பா நெல் சாகுபடி தொழில்நுட்பங்கள், பாரத பிரதமரின் விவசாயிகள் கௌரவ நிதி திட்டம், நில உடமை பதிவு செய்தல் அவசியம் மற்றும் பயன்கள் பற்றி விரிவாக விளக்கி கூறினர். உயிர் உரங்கள் பயன்படுத்துதல், இயற்கை வேளாண்மை, பாதுகாப்பாக பயிர் பாதுகாப்பு மருந்துகள் கையாளும் முறைகள், களைகொல்லி பயன்படுத்தும் முறைகள் பற்றியும், உழவன் செயலி பயன்படுத்துதல் மண்வள அட்டை திட்டத்தின் கீழ் மண் மாதிரி அடிப்படையில் உர மேலாண்மை செய்தல், நெல் வயலில் பாசி கட்டுப்பாடு, ஒட்டுண்ணி அட்டை கட்டுதல், இன கவர்ச்சி பொறி வைத்து கட்டுப்பாடு செய்தல் செயல் விளக்கமாக காண்பிக்கப்பட்டது. வேளாண்மைத் துறை சார்பில் இடுபொருள், நெல் இரகங்கள், உயிர் உரங்கள், பயிர் பூஸ்டர்கள் பயன்படுத்திட கேட்டுகொண்டார். அதன் பின் விதை சான்று அலுவலர் வேல்முருகன் பேசுகையில், லால்குடி வட்டாரத்தில் விதை பண்ணை அமைத்து வயலில் பராமரிப்பு செய்யும் முறைகள், சான்று அட்டை வகைகள் கலவன் நீக்குதல், தரமான விதை உற்பத்தி செய்ய ஆர்வமுள்ள விவசாயிகள் வர வேண்டும் என கூறினார்.

மேலும் சம்பா நெல் சாகுபடி தொழில்நுட்பங்கள் பற்றி விவசாயிகளுடன் கலந்துரையாடல் நடைபெற்றது. இந்த உழவர்கள் திரள் கூட்டத்தில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு

உதவி வேளாண்மை அலுவலர் எடிசன், விவசாயிகள் பி,எம்,கிசான் திட்டத்தில் தொடர்ந்து பயன்பெற தங்களது சுய விபரங்களை புதுப்பித்திடவும், வங்கி கணக்குடன் ஆதார் எண்ணை இணைத்துக் கொள்ள கூறினார். இதற்கான ஏற்பாட்டினை அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் சபரிசெல்வன், உதவி தொழில்நுட்ப மேலாளர் கார்த்திக், ஆகியோர் செய்து இருந்தனர். இந்த குழு கூட்டத்தில் கலந்து கொண்ட 100 மேற்பட்ட செம்பரை கிராம முன்னோடி விவசாயிகள் அனைவருக்கும் தொழில்நுட்ப கையேடு, துண்டு பிரசுரம், ஊக்க தொகை, மதிய உணவு வழங்கப்பட்டது. வேளாண்மைத் துறை அட்மா திட்டத்தின் கீழ் உழவர் பெருந்திரள் கூட்டம் நடத்திய லால்குடி வட்டார வேளாண்மை துறைக்கு விவசாயிகள் நன்றி தெரிவித்தனர்.

# தலைவாசல் வட்டார விவசாயிகளுக்கு வேளாண்மை துறை முக்கிய அறிவிப்பு

சேலம், செப்.22

சேலம் மாவட்டம், தலைவாசல் வட்டார விவசாயிகள் மானிய விலையில் மக்காச்சோள விதைகளைப் பெற்றுப் பயனடையு மாறு வேளாண்மைத் துறை முக்கிய அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

‘விவசாயத்தில் குறுகிய காலத்தில் நிறைவான மகசூலுடன் கணிசமான லாபம் ஈட்ட மக்காச்சோள சாகுபடி ஒரு முக்கிய பயிராகும். தலைவாசல் வட்டாரத்தில் பெருமளவு சாகுபடி செய்ய பட்டு வரும் இப்பயிர், குறுகிய காலப்பயிர் என்பதால் பாசன நீர் குறைவாக இருக்கும் வயல்களுக்கும் மிகவும் ஏற்றது‘ என்று குறிப்பிட்டுள்ளார். தற்போது, தமிழக அரசின் வேளாண்மைத் துறை மூலம் தேசிய உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து இயக்கம் திட்டத்தின் கீழ், மக்காச்சோள செயல் விளக்கத்திடல் அமைக்கும் விவசாயிகளுக்கு மானிய விலையில் அட்வென்டா 752 (Adventa 752) வீரிய ஒட்டுரக மக்காச்சோள விதைகள், உயிர் உரங்கள் மற்றும் நுண்ணூட்டங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. எனவே, இந்த நல்வாய்ப்பைப் பயன்படுத்தி மக்காச்சோளம் சாகுபடி செய்ய விரும்பும் தலைவாசல் வட்டார விவசாயிகள், உடனடியாக தலைவாசல் வேளாண்மை விரிவாக்க மையத்தையோ அல்லது தங்கள் பகுதி வேளாண்மை அலுவலர்களையோ அணுகலாம். தங்களுக்குத் தேவையான விதைகளைப் பெற, விவசாயிகள் தங்களது ஆதார் அட்டை நகல் மற்றும் கணினி சிட்டா ஆகியவற்றைச் சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

# வறட்சியை தாங்க விதை நேர்த்தி அவசியம்!

இராமநாதபுரம், செப்.22

வானம் பார்த்த பூமி என்று சொல்லப்படும் இராமநாதபுரம் மாவட்டத்தில் பருவமழையை நம்பி மானாவாரி பயிர் அதிக பரப்பளவில் சாகுபடி செய்யப்படுகிறது.மானாவாரி சாகுபடியில் மழை பெய்த பின் விதைப்பதால், முதலில் கிடைக்கும் மழை நீர் வீணாவதுடன் அதிக அளவு மழை பெய்த பின் உடனே விதைப்பதும் கடினமான ஒன்றாகிறது.

பருவமழை பெய்வதற்கு சுமார் 10 நாட்களுக்கு முன், முன் பருவ விதைப்பு செய்வாதல், மழை நீர் சீரிய முறையில் பயன்படுத்தப்பட்டு சீரான விதை முளைப்புத்திறனுடன் பயிர் செழித்து வளர்ந்து அதிக விளைச்சல் கொடுக்கிறது. சில சமயங்களில், விதை முளைக்கும் தருணத்தில் குறைவான மழை பொழிவு கிடைக்கும் பட்சத்தில் அல்லது மழை பெய்யத் தவறும் பொழுது விதைகள் வறட்சிக்கு உட்பட்டு விதை முளைப்பதில் சிரமம் ஏற்படுகிறது. இச்சிரமத்தை தவிர்க்கும் வகையில் விதைகளை விதைப்பதற்கு முன் கடினப்படுத்தி விதைக்கலாம்.

நெல் விதைகளை விதைப்பதற்கு முன் ஒரு சதவிகித பொட்டாசியம் குளோரைடு கரைசலில் விதைகளை 1:1 என்ற விகிதத்த்தில் 16 மணி நேரம் ஊறவைத்து, பின்பு நிழல் காய்ச்சலில் விதைகளை முன்பு இருந்த ஈரப்பதத்திற்கு உலர்த்தி விதைக்க வேண்டும். இவ்வாறு விதைகளை கடினப்படுத்தி விதைப்பதால், விதைகள் ஆரம்ப காலத்தில் ஏற்படும் வறட்சியை தாங்கி முளைத்து அதிக விளைச்சலை தருகின்றது.

அங்கக வேளாண்மை முறையில் மானாவாரி நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் பொட்டச்சியம் குளோரைடு உப்பிற்கு பதிலாக நன்மை செய்யும் மெத்தைலோ பாக்டீரியாவான, ஊஊய்னி திரவ நுண்ணுயிர் உரத்தை பயன்படுத்தலாம். நீர் பற்றாக்குறை அல்லது வறட்சியால் பாதிக்கப்படும் பயிர்களுக்கு ஒரு சதவிகித ஊஊய்னி திரவத்தை தெளிப்பதன் மூலம் பயிர்கள் நீரின் தேவையின்றி 5 முதல் 10 நாட்கள் வரை வாடாமல் வறட்சியை தாங்கும் தன்மையை பெறுகின்றது. இந்த திரவ நுண்ணுயிர் உரத்தை உபயோகிக்கும் பொழுது இதனுடன் வேறு எதையும் சேர்க்ககூடாது.

இவ்வாறு வறட்சி மேலாண்மை தொழில்நுட்பங்களை கடைப் பிடித்து, மானாவாரி விவசாயத்திலும் அதிக விளைச்சல் பெற்று, வருமானத்தை பெறுக்கிடலாம். மேலும் விதைகளின் தரத்தை பரிசோதனை செய்ய பரமக்குடி ஒழுங்குமுறை விற்பனைகூட வளாகத்தில் உள்ள விதைப்பரிசோதனை நிலையத்தில் 100 கிராம் நெல் விதைமாதிரிக்கு ரூ.80/- பரிசோதனை கட்டணமாக செலுத்தி விதைகளை பரிசோதனை செய்யுமாறு விதை பரிசோதனை அலுவலர் சி.சிவகாமி மற்றும் வேளாண்மை அலுவலர் ச.முருகேஸ்வரி மற்றும் ப.வீரபாண்டியன் ஆகியோர் விவசாயிகளுக்கு தகவல் தெரிவித்துள்ளனர்.



# மைலம்பாடியில் பருத்தியில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பயிற்சி



ஈரோடு, செப்.22

ஈரோடு மாவட்டம், பவானி வட்டாரத்தில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (ATMA) சார்பில், பருத்தியில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை என்ற தலைப்பில் விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் மைலம்பாடியில் நடைபெற்றது.

இப்பயிற்சிக்கு பவானி வேளாண்மை உதவி இயக்குநர் கனிமொழி தலைமை வகித்தார். உயிரியல் கட்டுப்பாடு மையம், பவானி வேளாண்மை அலுவலர் மதுமிதா கலந்து கொண்டு பயிற்சியின் முக்கியத்துவம் குறித்து எடுத்துரைத்தார்.

பயிற்சியில் சிறப்பு விருந்தினர்களாக மைராடா வேளாண் அறிவியல் நிலைய வேளாண் விஞ்ஞானி சீனிவாசன் மற்றும் குமரகுரு வேளாண்மை கல்லூரி உதவி பேராசிரியர் சோபன் சக்கரவர்த்தி ஆகியோர் கலந்து கொண்டு, பருத்தியில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை, பயிர் பாதுகாப்பு, பூச்சி மற்றும் நோய் மேலாண்மை உள்ளிட்ட தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளித்தனர்.

மேலும், வேளாண்மை துறை உதவி வேளாண்மை அலுவலர் சித்தையன், வேளாண்மைத் துறையின் பல்வேறு மானியத் திட்டங்கள் மற்றும் விவசாயிகளுக்கு வழங்கப்படும் அரசு நலத் திட்டங்கள் குறித்து விளக்கினார்.

நிகழ்ச்சியில் தொழில்நுட்ப மேலாளர் கங்கா வரவேற்புரை வழங்கினார். பயிற்சிக்கான முன் ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் சதீஷ்குமார் மற்றும் பூங்கோதை மேற்கொண்டனர்.

இப்பயிற்சியில் 40-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பருத்தி சாகுபடியில் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவது, ஒருங்கிணைந்த முறையில் பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வது மற்றும் அரசு மானியத் திட்டங்களைப் பயன்படுத்திக் கொள்வது குறித்து பயனடைந்தனர்.

# Rithvik Pipe

IS 4985 : 2021 CML-5400119810 · IS 9537 CML-5400121694 · BIS

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS**
**LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW · isha · POWERGRID · BHEL

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# மைக்ரோகிரீன்ஸ் : குறைந்த முதலீட்டில் அதிக வருமானம் தரும் நவீன சாகுபடி

நேற்றைய தொடர்ச்சி...

### தொடங்குவதற்கு முதலீடு எவ்வளவு தேவை?

மைக்ரோகிரீன்ஸ் சாகுபடியின் மிகப்பெரிய கவர்ச்சியே அதன் குறைந்த ஆரம்ப முதலீடு தான். சிறிய அளவில், வீட்டு உள்ளேயே தொடங்குவோருக்கான தோராயமான செலவு பிரிவு :

| பொருள் | தோராய செலவு (ரூ.) |
|---|---|
| 10 ட்ரேகள் (துளையிட்ட + துளையிடாத) | 1,000 - 1,500 |
| காக்கோபீட் / ஊடகம் (10 கிலோ) | 300 - 500 |
| விதைகள் (பல வகைகளில், 1 கிலோ மொத்தம்) | 800 - 2,000 |
| தெளிப்பான் மற்றும் சிறு கருவிகள் | 300 - 500 |
| ஸிசிம் கிரோலைட் (விருப்பத்திற்கு) | 1,500 - 3,000 |
| **மொத்த ஆரம்ப முதலீடு** | **4,000 - 7,500** |

இந்த முதலீட்டில் தொடங்கி, ஒரு ட்ரே மைக்ரோகிரீன்ஸை 150-300 கிராம் அளவில் அறுவடை செய்யலாம். சந்தையில் மைக்ரோ கிரீன்ஸ் ஒரு கிலோ ரூ.400 முதல் **ரூ.**1,200 வரை (வகையைப் பொறுத்து) விற்பனையாகிறது என்பதால், ஒரு ட்ரேயிலிருந்தே கணிசமான வருமானம் ஈட்ட முடியும். மாதத்திற்கு இரண்டு முதல் மூன்று சுற்றுகள் (crop cycles) விளைவிக்க முடியும் என்பதால், முதலீடு விரைவில் திரும்பப் பெற வாய்ப்புள்ளது.

### சந்தைப்படுத்துதலும் வருமான வாய்ப்பும்

ஒரு சதுர அடி இடத்தில் மாதம் பல சுற்றுகள் விளைவிக்க முடியும் என்பதால், மைக்ரோகிரீன்ஸ் குறைந்த நிலப்பரப்பில் அதிக வருமானம் தரும் சாகுபடியாக கருதப்படுகிறது. நகர்ப்புற ஓட்டல்கள், சாலட் தயாரிப்பாளர்கள், மற்றும் ஆர்கானிக் கடைகளுடன் நேரடி தொடர்பு ஏற்படுத்துவதன் மூலம் நிலையான வாடிக்கையாளர் தளத்தை உருவாக்கலாம்.

### வெற்றிகரமானச ந்தைப்படுத்தலுக்கு சில வழிமுறைகள்

**உள்ளூர் செஃப்களை அணுகுதல் :** ஃபைன்-டைனிங் மற்றும் நட்சத்திர ஓட்டல்களின் ஷெஃப்களை நேரடியாக சந்தித்து மாதிரிகளை கொடுப்பது மிகவும் பயனுள்ள வழி.

**சமூக ஊடகங்கள் மூலம் விளம்பரம் :** இன்ஸ்டாகிராம், வாட்ஸ் அப் பிசினஸ் போன்ற தளங்களில் புகைப்படங்களுடன் தயாரிப்புகளை காட்சிப்படுத்துவது நகர்ப்புற வாடிக்கையாளர்களை ஈர்க்க உதவும்.

சந்தாமுறை (Subscription model) : வாரந்தோறும் நேரடியாக வீடுகளுக்கு அல்லது அலுவலகங்களுக்கு மைக்ரோகிரீன்ஸ் அனுப்பும் சந்தா முறையை அறிமுகப்படுத்துவது நிலையான வருமானத்தை உறுதி செய்யும்.

**ஃபார்மர் ஸ்மார்க்கெட் மற்றும் ஆர்கானிக் கண்காட்சிகள் :** இவற்றில் பங்கேற்பது புதிய வாடிக்கையாளர்களை அடையாளம் காணவும், நேரடி கருத்துக்களைப் பெறவும் உதவும்.

விலை நிர்ணயம் : வகைக்கேற்ப ஒரு 100 கிராம் பாக்கெட்டை Rs.50 முதல் Rs.150 வரை விற்கலாம். சூரியகாந்தி, முட்டைக்கோஸ் போன்ற வகைகளுக்கு அதிக விலை நிர்ணயிக்க முடியும்.

"farm-to-table" மற்றும் ஆரோக்கிய உணவு போக்கு அதிகரித்து வருவதால், இந்தத் துறையில் நீண்ட கால வளர்ச்சி வாய்ப்பு உள்ளது. குறிப்பாக, கோவிட்-19 பெருந் தொற்றுக்குப் பின்னர் ஆரோக்கியம் மற்றும் நோய் எதிர்ப்புசக்தி குறித்த விழிப்புணர்வு அதிகரித்திருப்பதால், மைக்ரோகிரீன்ஸ் போன்ற ஊட்டச்சத்து நிறைந்த உணவுகளுக்கான தேவை தொடர்ந்து அதிகரிக்கும் எனக் கருதப்படுகிறது.

**புதியவர்கள் செய்யும் பொதுவான தவறுகள்**

**அதிக அடர்த்தியில் விதைப்பது :** விதைகளை மிக அடர்த்தியாக விதைத்தால், காற்றோட்டம் குறைந்து பூஞ்சை நோய் வருவதற்கான வாய்ப்பு அதிகரிக்கும்.

**ஒரே வகை விதையில் மட்டும் தொடங்குதல் :** பல வகைகளை ஒரே நேரத்தில் சிறிய அளவில் முயற்சி செய்து, எது சந்தையில் நன்கு விற்பனையாகிறது என்பதை கண்டறிவது நல்லது.

**அறுவடைக்குப் பின்சேமிப்பு முறை சரியில்லாமை :** அறுவடை செய்த மைக்ரோகிரீன்ஸை உடனடியாக குளிர்சாதன பெட்டியில் வைக்காவிட்டால் விரைவாக வாடிவிடும்.

**தொடர்ச்சியான சுற்றுகளை திட்டமிடாமை :** ஒரே நேரத்தில் அனைத்து ட்ரேகளையும் விதைத்து விட்டால், அறுவடை காலம் ஒன்று சேர்ந்து சந்தை தேவையை பூர்த்தி செய்ய முடியாமல் போகலாம். வாரந்தோறும் சில ட்ரேகளை புதிதாக விதைத்து, தொடர்ச்சியான அறுவடையை உறுதி செய்வது சிறந்தது.

**தரக்கட்டுப்பாட்டில் கவனம் செலுத்தாமை :** வாடிக்கையாளர்களின் நம்பிக்கையை தக்கவைக்க, ஒவ்வொரு சுற்றிலும் ஒரே தரத்தை பராமரிப்பது அவசியம்.

**சவால்களும் தீர்வுகளும்**

| **சவால்** | **தீர்வு** |
|---|---|
| பூஞ்சை தொற்று | ஈரப்பதம் கட்டுப்பாடு + நல்ல காற்றோட்டம் |
| விதை தரம் குறைவு | சான்றளிக்கப்பட்ட விதை நிறுவனங்களிட மிருந்து மட்டும் வாங்குதல் |
| சந்தை தொடர்பு இல்லாமை | உள்ளூர் செஃப்கள், சிறு ஓட்டல்களுடன் நேரடி பேச்சுவார்த்தை |
| அறுவடைக்குப் பின் பாதுகாப்பு | குளிர்சாதன சேமிப்பு, விரைவான விற்பனை சுழற்சி |
| கோடைக்கால அதிக வெப்பநிலை | நிழல்வலை, மின்விசிறி மூலம் காற்றோட்டம் |
| விலை ஏற்ற இறக்கம் | சந்தா முறை மூலம் நிலையான வருமானத்தை உறுதி செய்தல் |

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**



## அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

மைக்ரோகிரீன்ஸை வீட்டிலேயே சாகுபடி செய்ய பெரிய இடம் தேவையா? இல்லை. ஒரு சிறிய பால்கனி அல்லது ஜன்னல் ஓரம்கூட போதுமானது. செங்குத்து அடுக்குகளில் (vertical racks) பல ட்ரேகளை வைத்து இடத்தை திறம்பட பயன்படுத்தலாம்.

விதைப்பு முதல் அறுவடை வரை சராசரியாக எத்தனை நாட்கள் ஆகும்? வகையைப் பொறுத்து 7 முதல் 14 நாட்கள் வரை ஆகும். கடுகு, முள்ளங்கி போன்றவை வேகமாகவும், சூரியகாந்தி, முட்டைக் கோஸ் போன்றவை சற்று தாமதமாகவும் விளையும்.

ஒரே ஊடகத்தை மீண்டும் பயன்படுத்தலாமா? பொதுவாக பரிந்துரைக்கப்படாது. பயன்படுத்திய ஊடகத்தை உரமாக்கி (compost) தோட்ட வேலைக்கு பயன்படுத்தலாம், ஆனால் அடுத்த சுற்று மைக்ரோகிரீன்ஸ் சாகுபடிக்கு புதிய ஊடகம் பயன்படுத்துவது நோய்த் தொற்று அபாயத்தை குறைக்கும்.

## முடிவுரை

மைக்ரோகிரீன்ஸ் சாகுபடி, குறைந்த இடம், குறைந்த முதலீடு, மற்றும் விரைவான அறுவடை காலம் ஆகியவற்றால் இளைஞர்கள், நகர்ப்புற விவசாயிகள் மற்றும்கூடுதல் வருமானம் தேடும் குடும்பங்களுக்கு ஏற்ற ஒரு சிறந்த தொடக்க சாகுபடியாக உள்ளது. வேலையிழந்தவர்கள், ஓய்வு பெற்றவர்கள், மற்றும் வீட்டிலிருந்தே பகுதி நேர வருமானம் தேட விரும்புவோருக்கும் இது ஒரு சிறந்த வாய்ப்பாக அமைகிறது. குறைந்த ஆரம்ப முதலீடு, விரைவான வருமான சுழற்சி, மற்றும் அதிகரித்து வரும் சந்தை தேவை ஆகியவை இந்தத் துறையை கவர்ச்சிகரமானதாக ஆக்குகின்றன.

சரியான பயிற்சியும் தொடர்ச்சியான தர கட்டுப்பாட்டுடன் செயல் படுத்தினால், இது ஒரு நிலையான வருமான ஆதாரமாக வளரக் கூடும். ஆரம்பத்தில் சிறிய அளவில் தொடங்கி, சந்தை கோரிக்கையை கண்காணித்து, படிப்படியாக விரிவாக்கம் செய்வதே நீண்டகால வெற்றிக்கான சிறந்த வழி. சரியான திட்டமிடலுடன், சரியான வகைகளைத் தேர்ந்தெடுத்து, தரத்தில் சமரசம் இல்லாமல் செயல்பட்டால், மைக்ரோகிரீன்ஸ் சாகுபடி வெறும் பொழுது போக்கு அளவில் நின்று விடாமல் ஒரு முழுமையான வணிக வாய்ப்பாக வளரக்கூடும்.

மேலும் தகவலுக்கு : ***டாக்டர்.ராஜேஷ் நல்லையா, விவசாய ஆலோசகர், RNR Agri Developers | தொடர்பு : 98428 41987 | rnragridevelopers@gmail.com | www.rnragridevelopers.com.***

முற்றும்.


ஜெயின் நாற்றுகள்
சிறந்த மகசூல் - அதிக லாபம்
Jain Seedlings
PAPAYA
பப்பாளி
Rs. 16/-
ஒரு நாற்றின் விலை
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக.(உடுமலையிலிருந்து)
ரெட் லேடி
தைவான் 786
முன்பதிவு செய்வதற்கு
இன்றே அழையுங்கள்:
94425 02396